027/DD/20

T.C - 121

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## FOREST DEPARTMENT TEST – FUNDAMENTAL RULES OF TAMIL NADU GOVERNMENT, TAMIL NADU STATE SERVICE RULES ETC.

(Without Books)

Maximum Time : 2 hours

Maximum Marks : 80

***IMPORTANT INSTRUCTIONS***

**OBJECTIVE TYPE**
கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

**NB : Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

**This booklet should not be opened till the Invigilator gives a signal to open it. As soon as the signal is received you should open the booklet and then proceed to answer the questions.**
இந்த வினாத்தொகுப்பினை கண்காணிப்பாளரின் அனுமதி பெறுவதற்கு முன்னர் திறக்ககூடாது. கண்காணிப்பாளர் வினாத்தொகுப்பினை திறப்பதற்கு அனுமதி அளித்தவுடன் வினாத்தொகுப்பினை திறந்து விடையளிக்க தொடங்கலாம்.

1. This question booklet contains 80 number of objective type questions. Prior to attempting to answer, the candidate is requested to check whether all questions are there and ensure that there are no blank pages in the question booklet. In case, if any defect is noticed in the question paper, it shall be reported to the Invigilator immediately, **within first 10 minutes** after which no request will be entertained.

   இவ்வினாத்தாள் 80 கொள்குறி வகை வினாக்களை கொண்டது. விண்ணப்பதாரர்கள் விடையளிக்க தொடங்கும் முன், வினாத்தாளில் எல்லா வினாக்களும் இடம் பெற்றுள்ளனவா என்பதையும், ஏதேனும் சில பக்கங்கள் / வினாக்கள் அச்சிடப்படாமல் விடுபட்டுள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். வினாத்தாளில் ஏதேனும் குறை இருப்பின் வினாத்தாளைப் பெற்ற பின் பத்து நிமிடங்களுக்குள் அறை கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும். அதற்கு பிறகு தெரிவிக்கப்படும் கோரிக்கைகள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

2. Answer all questions. All questions carry equal marks.

   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். அனைத்து வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.

[Turn over

3. Candidate must write his Register Number in the space provided on the top right side of this booklet alone. Do not write anything else on the Question Booklet.
விண்ணப்பதாரரின் பதிவெண்ணை இவ்வினாத்தாளின் மேல் வலது பக்கத்தில் அதற்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் எழுத வேண்டும். வினாத்தாளில் வேறு எதையும் எழுதக் கூடாது.

4. The sheet before the last page of the question booklet shall be used for any rough work.
வினாத்தாளின் கடைசி பக்கத்திற்கு முன் பக்கத்தில் rough work எழுதி பார்க்க உபயோகித்துக் கொள்ளவும்.

5. (a) Each question comprises of four responses i.e. (A), (B), (C) and (D). Candidate shall select only one correct response. In case, if the candidate feels that there are more than one correct response, **shade the response which he considers is the best.**

(b) In any case, a candidate shall choose only one response for each question.

(c) **If more than one answer is shaded for a question, the answer will be treated as wrong and no mark will be given for that question.**

(d) The total marks will depend on the total number of correct responses marked in the OMR answer sheet. (For this purpose, only one shaded circle for a question will be taken into account for awarding mark)

(a) ஒவ்வொரு வினாவிற்கும் (A), (B), (C), (D) என நான்கு விடைகள் கொடுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர் அவற்றில் ஏதேனும் ஒரு சரியான விடையைத் தேர்வு செய்ய வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு வினாவிற்கு இருப்பதாக கருதினால், **அவற்றில் எவ்விடை மிகச் சரியானது என கருதுகிறீர்களோ, அவ்விடையை நிழலிட்டு காட்ட வேண்டும்.**

(b) எவ்வாறிருப்பினும், ஒரு வினாவிற்கு ஒரே ஒரு விடையைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

(c) **ஒரு வினாவிற்கு ஒன்றுக்கு மேற்பட்ட வட்டங்களில் விடையளிக்கப்பட்டிருந்தால் அவ்விடை தவறானதாக கருதப்பட்டு, அவ்வினாவிற்கு மதிப்பெண் வழங்கப்படமாட்டாது.**

(d) OMR விடைத் தாளில் குறிக்கப்பட்ட சரியான விடைகளைப் பொறுத்து, மொத்த மதிப்பெண்கள் வழங்கப்படும் (ஒரு வினாவிற்கு ஒரு வட்டத்தில் (குறிப்பிட்ட) நிழலிட்ட விடை மட்டுமே மதிப்பெண் வழங்க கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்).

6. Do not mark the answers in the Question Booklet.
வினாத்தாளில் விடைகளைக் குறிப்பிடக் கூடாது.

7. Candidate shall not remove or tear off any sheet from this question booklet. During the examination he is not allowed to take the question booklet out of the examination hall. Only after the examination is over, he shall be allowed to take the question booklet.
விண்ணப்பதாரர், வினாத்தாளின் எந்த ஒரு பக்கத்தையும், நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நடைபெறும் போது, வினாத்தாளை தேர்வு கூடத்தைவிட்டு வெளியே எடுத்து செல்ல அனுமதி கிடையாது. தேர்வு முடிந்த பின்னரே வினாத்தாளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

8. Failure to comply with any of the above instructions will render you liable to such action or penalty as the Commission may decide.
மேற்கண்ட அறிவுரைகளில் ஏதேனும் மீறப்படுமேயானால் தேர்வாணையம் எடுக்கும் தண்டனை / நடவடிக்கைக்கு உள்ளாக நேரிடும்.

9. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின், ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

1. A Person oriented post created for a limited period and for a limited purpose to accommodate a person in certain contingencies is known as

(A) Supernumerary Post
(B) Contingency Post
(C) Limited Post
(D) Temporary Post

ஒரு சில சூழ்நிலைகளில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக ஒரு நபரை பணியமர்த்தவேண்டி உருவாக்கப்படும் பணியிடத்திற்கு பெயர்

(A) மிகைப்பணி
(B) தற்செயல் பணி
(C) வரையறுக்கப்பட்ட பணி
(D) தற்காலிக பணி

2. In all cases of stoppages of increment with cumulative effect the period of stoppage reckoned should be

(A) Excluding of interval's spent on Leave
(B) Inclusive of Interval's spent on leave
(C) Excluding period spent on Training
(D) Excluding Joining Time

ஊதிய உயர்வு திரண்ட பயனுடன் தள்ளிவைக்கப்படும் தண்டனை நிகழ்வுகள் அனைத்திலும் தண்டனைக்காலம் கணக்கிடப்படும்போது

(A) விடுப்பு காலம் நீங்கலாக கணக்கிடப்பட வேண்டும்
(B) விடுப்பு காலம் உள்ளடக்கியே கணக்கிடப்பட வேண்டும்
(C) பயிற்சி காலம் நீங்கலாக கணக்கிடப்பட வேண்டும்
(D) பணி ஏற்பிடைக்காலம் நீங்கலாக கணக்கிடப்பட வேண்டும்

3. The Rate of House Rent Allowance admissible to a Government servant under suspension, at the place where ordered to stay during suspension is

(A) Full rate of House Rent Allowance
(B) Half rate of House Rent Allowance
(C) One third of House Rent Allowance
(D) No House Rent Allowance

தற்காலிக பணிநீக்கத்தின்போது தங்கியிருக்க உத்தரவிட்ட இடத்தில் வசிக்கும் அரசு ஊழியருக்கு அனுமதிக்கப்படும் வீட்டு வாடகைப்படி

(A) முழு வீட்டு வாடகைப்படி
(B) பாதியளவு வீட்டு வாடகைப் படி
(C) மூன்றில் ஒரு பங்கு வீட்டு வாடகைப்படி
(D) வீட்டு வாடகைப் படி ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது

4. Regarding Deductions from Subsistence allowance

(A) Postal life insurance Premium to be deducted if opted for

(B) General provident fund subscription shall not be deducted even if the Government servant under suspension opted for.

(C) Refund of advances taken from General Provident fund to be deducted compulsorily

(D) Life Insurance premium shall be deducted

பிழைப்பூதியத்திலிருந்து பிடித்தம் செய்ய வேண்டியவை

(A) விருப்பத்தின்பேரில் அஞ்சல் காப்பீட்டு சந்தா பிடித்தம் செய்யலாம்

(B) பணி நீக்கவிருப்பம் தெரிவித்திருந்தாலும் பொது சேம நல நிதி சந்தா பிடித்தம் செய்யக்கூடாது

(C) பொது சேம நல நிதி தற்காலிக முன்பண பிடித்தம் கண்டிப்பாக பிடித்தம் செய்யப்பட வேண்டும்

(D) ஆயுள் காப்பீட்டு சந்தா பிடித்தம் செய்யப்பட வேண்டும்

5. Regarding Voluntary retirement, Which of the following answer is correct?

(A) An Eligible government servant may retire from service by giving notice of not less than three months in writing direct to the appointing authority with a copy marked to his immediate superior officer for information

(B) An Eligible government servant may retire from service by not giving notice to anybody

(C) An Eligible government servant may retire from service by giving notice on the forenoon of his proposed retirement

(D) An Eligible government servant may retire from service by giving notice of not less than three months in writing direct to his subordinates.

தன்னார்வ ஓய்வு குறித்து, பின்வரும் பதில்களில் சரியானது எது?

(A) ஒரு தகுதியுள்ள அரசாங்க ஊழியர் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு குறையாத எழுத்துபூர்வமான முன்னறிவிப்பு கடிதத்தினை நேரடியாக நியமன அலுவலர்க்கு அனுப்பி அதன் நகலை மேலலுவலருக்கு அனுப்பியும் விருப்ப ஓய்வு பெறலாம்

(B) ஒரு தகுதியுள்ள அரசாங்க ஊழியர் எவருக்கும் அறிவிப்பு செய்யாமல் விருப்ப ஓய்வு பெறலாம்

(C) ஒரு தகுதியுள்ள அரசாங்க ஊழியர் தாம் விருப்ப ஓய்வுப்பெறவுள்ள நாளின் முற்பகலில் அறிவிக்கை செய்து விருப்ப ஓய்வு பெறலாம்

(D) ஒரு தகுதியுள்ள அரசாங்க ஊழியர் குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு குறையாத எழுத்துபூர்வமான முன் அறிவிப்பு கடிதத்தினை நேரடியாக தமது கீழ்நிலை அலுவலர்களுக்கு அனுப்பி விருப்ப ஓய்வு பெறலாம்

6. Where a Government servant under suspension dies before the disciplinary or the court proceedings instituted against him are concluded, the period between the date of suspension and the date of death, shall be treated

(A) As Absent from duty

(B) As duty for all purpose.

(C) As leave to which eligible

(D) As special casual leave.

தற்காலிக பணி நீக்கத்திலுள்ள ஒரு அரசாங்க ஊழியர், அவருக்கு எதிரான ஒழுங்கு நடவடிக்கை அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் முடிவுபெறுமுன் இறந்துவிட்டால், தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்ட தேதி முதல் இறப்பு தேதி வரையிலான காலம் பின்வருமாறு வரன்முறை செய்யப்படும்

(A) பணிக்கு ஆஜராகாத காலம்

(B) பணிக்காலம்

(C) தகுதியான விடுப்பாக

(D) சிறப்பு தற்செயல் விடுப்பாக

7. In case of revocation of suspension of a Government servant, the period from the date of serving the posting order to the date of joining duty shall be treated as joining time eligible and that any excess period over and above the joining time availed shall be treated as

(A) Leave to which eligible

(B) Absent from duty

(C) Joined time

(D) Leave on loss of pay

ஒரு அரசாங்க ஊழியரை தற்காலிக பணி நீக்கத்திலிருந்து பணிக்கு மீள எடுக்கும்போது அவருக்கு பணி நியமன ஆணை சார்பு செய்த தேதியிலிருந்து அவர் பணியில் சேரும் நாள்வரை தகுதியான பணியேற்பிடை வழங்கி அதற்கு மிகுதியான நாட்களை பின்வருமாறு வரன்முறை செய்யலாம்

(A) தகுதியான விடுப்பாக

(B) பணிக்கு ஆஜராகாத காலமாக

(C) பணியேற்பிடைக்காலம்

(D) சம்பளமில்லா விடுப்பாக

8. Where a Government servant applies for leave on medical certificate for short periods and there is no time to constitute a medical committee, the head of office or the leave sanctioning authority may refer him to

(A) A registered medical practitioner

(B) The nearest available Government doctor not below the rank of a Civil Surgeon.

(C) The Director of Health Services

(D) The Joint Director of Health Services

ஒரு அரசாங்க ஊழியர் குறுகிய காலத்திற்கு ஒரு மருத்துவ சான்றின் பேரிலான விடுப்பிற்கு விண்ணப்பித்துள்ள நிலையில் மருத்துவக் குழுவை அமைப்பதற்கான கால அவகாசம் இல்லாதபோது, அலுவலகத்தின் தலைவர் அல்லது விடுப்பு ஒப்புதல் வழங்கும் அதிகாரம் உள்ளவர் அந்த அரசு ஊழியரை மருத்துவ பரிசோதனைக்கு கீழ்க்கண்டவருக்கு அனுப்பலாம்

(A) பதிவு பெற்ற மருத்துவர்

(B) அருகாமையிலுள்ள சிவில் சர்ஜன் தரத்திற்கு குறையாத ஒரு அரசு மருத்துவர்

(C) சுகாதாரத் துறை இயக்குனர்

(D) சுகாதாரத்துறை இணை இயக்குனர்

9. If an interruption of duty other than leave occurs in the service on a non-permanent Government servant, the earned leave to his credit shall

(A) Continue

(B) Lapse

(C) Be carried over

(D) Not be reduced

ஒரு நிரந்தரமில்லா அரசு ஊழியர் பணியில் இடையில் முறிவு ஏற்பட்டால் அவரது ஈட்டிய விடுப்பு கணக்கு

(A) தொடரும்

(B) காலாவதியாகிவிடும்

(C) பின் எடுத்துச் செல்லப்படும்

(D) அளவு குறைக்கப்படாது

10. Special Casual leave may be granted in the following Circumstances

(A) Fever

(B) Home Guard duty period

(C) Religious function

(D) Stomach ache

சிறப்பு தற்செயல் விடுப்பு பின்வரும் சூழ்நிலைகளில் வழங்கப்படலாம்

(A) காய்ச்சல்

(B) ஊர் காவல் பணிக்காலம்

(C) மத விழா

(D) வயிற்று வலி

11. The Period of probation for Junior Assistants is

(A) Six months on duty within a continuous period of one year

(B) One year on duty within a continuous period of two years

(C) Two years an duty within a continuous period of three years

(D) Three years an duty within a continuous period of five years.

இளநிலை உதவியாளர்களுக்கான தகுதிக்காண் பருவ காலம்

(A) ஆறு மாதங்கள், ஓராண்டு தொடர்ச்சியான பணியில்

(B) ஓராண்டு, இரண்டாண்டுகள் தொடர்ச்சியான பணியில்

(C) இரண்டாண்டுகள், மூன்றாண்டுகள் தொடர்ச்சியான பணியில்

(D) மூன்றாண்டுகள், ஐந்தாண்டுகள் தொடர்ச்சியான பணியில்

12. The Accounts Test to be passed by the Junior Assistants; in the Forest Department, for promotion as Assistants is

(A) Account Test for Subordinate Officers Part-I

(B) Account Test for Subordinate Officers Part-II

(C) Account Test for Executive Officers Part-I

(D) Account Test for Executive Officers Part-II

வனத் துறையில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்கள் உதவியாளராக பதவியுயர்வு பெற தேர்ச்சி பெற வேண்டிய கணக்குத்தேர்வு

(A) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பகுதி 1

(B) சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பகுதி 2

(C) செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பகுதி 1

(D) செயல் அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வு பகுதி 2

13. Promotions made other than to a selection category or a selection grade shall be made in accordance with seniority unless

(A) the officer belongs to a political party

(B) a Member is given special promotion for conspicuous merit and ability

(C) the officer belongs to a religious association

(D) the officer belongs to a caste association

கீழ்கண்ட காரணம் தவிர, ஒரு தேர்வுநிலை வகை அல்லது தேர்வுநிலை பதவியுயர்வுகள் முதிர்நிலை அடிப்படையிலேயே செய்யப்பட வேண்டும்

(A) ஒரு அலுவலர் அரசியல் கட்சியில் சேர்ந்திருந்தால்

(B) ஒரு பணியாளருக்கு வெளிப்படையான தகுதி மற்றும் திறனுக்காக சிறப்பு பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தால்

(C) ஒரு அலுவலர் மத அமைப்பில் சேர்ந்திருந்தால்

(D) ஒரு அலுவலர் சாதி சங்கத்தில் சேர்ந்திருந்தால்

14. If relinquishment of right or privilege is made permanently and is accepted, subsequent claim of the relinquished rights or privileges shall

(A) Not be entertained

(B) Be entertained

(C) Be considered

(D) Be accepted

உரிமை அல்லது சலுகை நிரந்தரமாக துறக்கப்பட்டு அது ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டால், பின்னர் உரிமைகள் அல்லது சலுகைகள் கோரப்பட்டால் அது

(A) ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது

(B) ஏற்றுக்கொள்ளப்படும்

(C) பரிசீலிக்கப்படும்

(D) அனுமதிக்கப்படும்

15. A District Forest Officer dropped a charge as not proved against a Forester. The Conservator of Forest took the case to revive. Whether the Conservator of Forests has powers to do so?

(A) No. Higher authority cannot revive the case dropped by lower authority

(B) Yes. Higher authority can revive a case dropped by lower authority

(C) Depends upon the conduct of the Forester

(D) Depends upon the position of the District Forest officer

ஒரு மாவட்ட வன அலுவலர் ஒரு வனவரின் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கப்படவில்லை என தள்ளுபடி செய்துவிட்டார். வனப்பாதுகாவலர் இந்த வழக்கை மறுஆய்வு செய்ய எடுத்துள்ளார். வனபாதுகாவலருக்கு இதற்கு அதிகாரம் உள்ளதா?

(A) இல்லை. கீழ்நிலை அலுவலர் ரத்து செய்ததை மேலலுவலர் மறு ஆய்வு செய்ய முடியாது

(B) ஆம். கீழ்நிலை அலுவலர் ரத்து செய்ததை மேலலுவலர் மறு ஆய்வு செய்யமுடியும்

(C) அது அந்த வனவரின் நடத்தையை பொறுத்தது

(D) அது அந்த மாவட்ட வன அலுவலரின் நிலைமையை பொறுத்தது

16. During the Course of disciplinary proceedings under rule 17 (b) of Tamilnadu Civil Services (Disciplinary and Appeal) Rules, personal hearing of the delinquent officer is

(A) not necessary (B) Optional

(C) a must (D) Negligible

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறையும் மேல்முறையீடும்) விதி 17(ஆ)ன்கீழ் நடவடிக்கைகளின்போது குற்றம் சுமத்தப்பட்டுள்ள அலுவலரின் தன்னிலை விளக்கம் கேட்கப்படுவது

(A) தேவையற்றது (B) விருப்பத்தை பொறுத்தது

(C) அவசியம் (D) புறக்கணிக்கப்படலாம்

17. For Cross examination of witness under Tamilnadu Civil Services (Disciplinary and Appeal) Rule 17 (b), a retired Government servant may assist delinquent Government servants in

(A) One case (B) Two cases

(C) Three Cases (D) No limit

தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்கு முறையும் மேல்முறையீடும்) விதி 17(ஆ)ன் கீழ் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய ஒரு ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர், அரசாங்க ஊழியர்களுக்கு எத்தனை வழக்குகளில் உதவலாம்?

(A) ஒரு வழக்கு (B) இரண்டு வழக்குகளில்

(C) மூன்று வழக்குகளில் (D) வரம்பு ஏதுமில்லை

18. A Government Servant shall be deemed to have been suspended under Tamilnadu Civil Services (Disciplinary and Appeal) Rule 17 (e), if he is detained in custody on any charge for a period longer than

(A) Twelve hours (B) Eighteen hours

(C) Twenty four hours (D) Forty eight hours

ஒரு அரசாங்க ஊழியர், எந்தவொரு குற்றச்சாட்டிலும் ———— நேரத்திற்குமேல் காவலில் வைக்கப்பட்டிருந்தால் தமிழ்நாடு குடிமைப் பணிகள் (ஒழுங்குமுறையும் மேல்முறையீடும்) விதி 17 (இ)ன் கீழ் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டதாகக் கருதப்படுவார்.

(A) பன்னிரண்டு மணி நேரம் (B) பதினெட்டு மணி நேரம்

(C) இருபத்தி நான்கு மணி நேரம் (D) நாற்பத்தெட்டு மணி நேரம்

19. "All orders of punishment shall also state the grounds on which they are based and shall be communicated is writing to the person against whom they are passed" this is

(A) Incorrect
(B) Correct
(C) Wrong
(D) Negligible

அனைத்து தண்டனை ஆணைகளிலும் அவற்றின் அடிப்படை மற்றும் ஆதாரங்களை குறிப்பிட்டு குற்றம் சுமத்தப்பட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும் – இந்த கூற்று

(A) சரியில்லை
(B) சரி
(C) தவறு
(D) புறக்கணிக்கப்படலாம்

20. The Competent authority to withhold increment of Forest Range Officer is

(A) District Forest Officer
(B) Conservation of Forests
(C) Chief Conservator of Forests
(D) The Government

வனச் சரக அலுவலரின் ஊதிய உயர்வை நிறுத்திவைக்கும் அதிகாரமுள்ள அலுவலர்

(A) மாவட்ட வன அலுவலர்
(B) வனப்பாதுகாவலர்
(C) தலைமை வனப்பாதுகாவலர்
(D) அரசு

21. Courts may summon any Government servant to report for witness

(A) Through the Controlling officer
(B) Directly
(C) Through the District Collector
(D) Through the head of the Department

எந்த அரசு ஊழியரையும் சாட்சியமளிக்க ஆஜராக நீதிமன்றங்கள் பின்வருமாறு அழைக்கலாம்?

(A) கட்டுப்பாடு அலுவலர் மூலமாக
(B) நேரடியாக
(C) மாவட்ட ஆட்சியர் மூலமாக
(D) துறை தலைவர் மூலமாக

22. A Forester found a valuable pen on the road side and after enquiry the owner of the pen is not known. In such a situation

(A) He may handover the pen to the police

(B) He must handover to the Neighbour

(C) He must handover it to a student

(D) He must put it is the place he found is sincerely

ஒரு வனவர் சாலையோரத்தில் ஒரு மதிப்புமிக்க பேனா கண்டுபிடித்து விசாரணை செய்ததில் பேனா உரிமையாளர் தெரியவில்லை என்றால்

(A) அவர் விரும்பினால் பேனாவை காவல் நிலையத்தில் ஒப்படைக்க வேண்டும்

(B) பக்கத்து வீட்டுக்காரரிடம் ஒப்படைக்க வேண்டும்

(C) ஒரு மாணவரிடம் கொடுக்கவேண்டும்

(D) எடுத்த இடத்திலேயே வைத்துவிட வேண்டும்

23. The Competent authority to refix the boundaries of the villages within the same Taluk, which involves transfer of huge extent of area, is

(A) The Village Administrative Officer (B) The Thasildar

(C) The District Collector (D) The Board of Revenue

அதே தாலுக்காவில் உள்ள கிராமங்களின் எல்லைகளை, பரந்த அளவிலான பரப்பளவு பரிமாற்றம் உள்ள நேர்வில், மறுநிர்ணயம் செய்வதற்கான தகுதிவாய்ந்த அதிகாரம்

(A) கிராம நிர்வாக அலுவலர் (B) வட்டாட்சியர்

(C) மாவட்ட ஆட்சியர் (D) போர்டு ஆப் ரெவன்யூ

24. Additional Pay for holding full additional charge is eligible for

(A) Group A and B officers only

(B) Group A Officers only

(C) Group B officers Only

(D) Group B and C Officers only

கூடுதல் பொறுப்பு ஊதியம் பெற தகுதியுடைய அலுவலர்கள்

(A) ஏ மற்றும் பி பிரிவு அலுவலர்கள் மட்டும்

(B) ஏ பிரிவு அலுவலர்கள் மட்டும்

(C) பி பிரிவு அலுவலர்கள் மட்டும்

(D) பி மற்றும் சி பிரிவு அலுவலர்கள் மட்டும்

25. The rate of additional pay for holding full additional charge is

(A) One fifth of pay drawn in the regular post or Half of the minimum pay of the additional post whichever is less

(B) One third of pay drawn in the regular post or Half of the minimum pay of the additional post whichever is less

(C) Double the pay drawn in the regular post or Half of the minimum pay of the additional post whichever is less

(D) Equal to the pay drawn in the regular post

முழு கூடுதல் பொறுப்புக்கு வழங்கப்படக் கூடிய பொறுப்பு ஊதிய விகிதம்

(A) நடப்பு பதவியில் பெறும் ஊதியத்தில் ஐந்தில் ஒரு பகுதி அல்லது கூடுதல் பொறுப்பு பதவியின் குறைந்தபட்ச ஊதியத்தில் பாதியளவு இதில் எது குறைவோ அது

(B) நடப்பு பதவியில் பெறும் ஊதியத்தில் மூன்றில் ஒரு பகுதி அல்லது கூடுதல் பொறுப்பு பதவியில் குறைந்தபட்ச ஊதியத்தில் பாதியளவு இதில் எது குறைவோ அது

(C) நடப்பு பதவியில் பெறும் ஊதியத்தில் இருமடங்கு அல்லது கூடுதல் பொறுப்பு பதவியில் குறைந்தபட்ச ஊதியத்தில் பாதியளவு இதில் எது குறைவோ அது

(D) நடப்பு பதவியில் பெறும் ஊதியத்திற்கு சமமாக

26. Group D employees are those

(A) Drawing a Grade pay of Rs. 1,000
(B) Drawing a Grade pay of Rs. 1,100
(C) Drawing a Grade pay of Rs. 1,200
(D) Drawing a Grade pay of Rs. 1,300

"டி" பிரிவு ஊழியர்கள்

(A) ரூ. 1,000 தர ஊதியம் பெறுவோர்
(B) ரூ. 1,100 தர ஊதியம் பெறுவோர்
(C) ரூ. 1,200 தர ஊதியம் பெறுவோர்
(D) ரூ. 1,300 தர ஊதியம் பெறுவோர்

27. The list of approved candidates, so prepared, shall be in force for a period of

(A) Six months
(B) One year
(C) Three years
(D) Five years

அங்கீகரிக்கப்பட்ட தேர்ச்சியாளர்கள் பட்டியல், தயாரிக்கப்பட்டு ———————— காலத்திற்கு நடைமுறையில் இருக்கும்

(A) ஆறு மாத
(B) ஒரு வருட
(C) மூன்று வருட
(D) ஐந்து வருட

28. The method of recruitment of Deputy Conservator of Forests is

(A) Direct recruitment (B) By transfer

(C) By promotion (D) By nomination

துணை வனப்பாதுகாவலர் பதவிக்கு ———————— நியமனம் செய்யப்படுகிறது.

(A) நேரடியாக (B) இடமாற்றம் மூலம்

(C) பதவி உயர்வு மூலம் (D) நியமனம் மூலம்

29. Who is the competent authority to declare the completion of probation of an Assistant Conservator of Forests?

(A) District Forest Officer (B) Conservator of Forests

(C) Chief Conservator of Forests (D) The Government

ஒரு உதவி வனப்பாதுகாவலரின் தகுதிகாண் பருவத்தை முடித்ததாக அறிவிக்கை செய்யும் அதிகாரம் படைத்தவர் யார்?

(A) மாவட்ட வன அலுவலர் (B) வனப்பாதுகாவலர்

(C) தலைமை வனப்பாதுகாவலர் (D) அரசு

30. The Equipment allowance granted during the two year course of study to a direct recruited Assistant Conservator of Forests is

(A) Rs. 1,000/- (B) Rs. 3,000/-

(C) Rs. 5,000/- (D) Rs. 10,000/-

நேரடி நியமனம் செய்யப்பட்ட உதவி வனப்பாதுகாவலருக்கு இரண்டு வருட கால பயிற்சியின் போது வழங்கப்படும் உபகரணப் படி

(A) ரூ. 1,000/- (B) ரூ. 3,000/-

(C) ரூ. 5,000/- (D) ரூ. 10,000/-

31. The crucial date for preparation of annual list of approved candidates is

(A) 15th August (B) 15th September

(C) 15th October (D) 15th December

அங்கீகரிக்கப்பட்ட தேர்வர்களின் வருடாந்திர பட்டியலை தயாரிப்பதற்கான தீர்வுக்குரிய தேதி

(A) ஆகஸ்ட் 15 (B) செப்டம்பர் 15

(C) ஆக்டோபர் 15 (D) டிசம்பர் 15

32. The attendance Register shall be closed daily by

(A) 10.10 AM (B) 10.30 AM

(C) 5.30 PM (D) 5.45 PM

வருகை பதிவு தினசரி மூடப்படும் நேரம்

(A) 10.10 முற்பகல் (B) 10.30 முற்பகல்

(C) 5.30 பிற்பகல் (D) 5.45 பிற்பகல்

33. The reply to queries raised in the margin of an office Note shall be recorded by a Junior Assistant in

(A) the margin (B) continuations of note

(C) the draft (D) post card

ஒரு அலுவலரால் அலுவலகக் குறிப்பில் மார்ஜினில் எழுதப்பட்ட கேள்விகளுக்கான பதில்களை ஒரு இளநிலை உதவியாளரால் எந்த இடத்தில் பதிவு செய்ய வேண்டும்?

(A) மார்ஜினில் (B) அலுவலகக் குறிப்பின் தொடர்ச்சியாக

(C) வரைவில் (D) தபால் அட்டையில்

34. L. Dis' Means

(A) Long disposal (B) Lodged disposal

(C) Light disposal (D) Learned disposal

எல்.டிஸ்' அப்படியென்றால்

(A) லாங் டிஸ்போசல் (B) லாட்ஜிடு டிஸ்போசல்

(C) லைட் டிஸ்போசல் (D) லேனர்ட் டிஸ்போசல்

35. Any Periodical report shall not be registered in

(A) Calendar of Periodicals (B) Despatch Register

(C) Periodical Register (D) Personal Register

எந்தவொரு காலமுறை அறிக்கையும் எந்த பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டியதில்லை?

(A) காலமுறை அறிக்கைகளின் நாற்காட்டி (B) அனுப்புகை பதிவேடு

(C) காலமுறை அறிக்கை பதிவேடு (D) தன் பதிவேடு

36. The Register / file maintained for checking of personal Register and periodical Register is called as

(A) Checking Register
(B) Distribution Register
(C) Retrenchment Register
(D) Running Note file

தன் பதிவேடு மற்றும் காலமுறை பதிவேடுகளை சரிபார்க்க பயன்படுத்தப்படும் பதிவேடு அல்லது கோப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) சோதனை பதிவேடு
(B) பகிர்மானப் பதிவேடு
(C) ஆட்குறைப்பு பதிவேடு
(D) தொடர்குறிப்புப் பதிவேடு

37. For reuse of covers, the incoming covers shall be carefully opened, kept and shall be sent to

(A) The Government Press
(B) The Post Office
(C) The Revenue Inspector
(D) The Tahsildar

தபால் உறைகளை மறுபயன்பாட்டிற்கு எதுவாக, கவனமாக திறந்து சேகரித்து வைத்து அதனை புதுப்பித்தலுக்காக யாருக்கு அனுப்பவேண்டும்?

(A) அரசு அச்சகம்
(B) அஞ்சல் நிலையம்
(C) வருவாய் ஆய்வாளர்
(D) வட்டாட்சியர்

38. The Distribution Register shall be destroyed after

(A) One year
(B) Three years
(C) Five years
(D) Ten years

பகிர்மானப் பதிவேடு எவ்வளவு காலத்திற்கு பிறகு அழிக்கப்படும்

(A) ஒரு வருடம்
(B) மூன்று வருடம்
(C) ஐந்து வருடம்
(D) பத்து வருடம்

39. The Periodical Register shall be destroyed after

(A) One year
(B) Three years
(C) Five years
(D) Ten years

காலமுறை பதிவேடு எவ்வளவு காலத்திற்கு பிறகு அழிக்கப்படும்?

(A) ஒரு வருடம்
(B) மூன்று வருடம்
(C) ஐந்து வருடம்
(D) பத்து வருடம்

40. A Call Book shall be destroyed after

(A) One year
(B) Three years
(C) Five years
(D) Ten years

மறுகவனிப்புப் பதிவேடு எவ்வளவு காலத்திற்கு பிறகு அழிக்கப்படும்?

(A) ஒரு வருடம்
(B) மூன்று வருடம்
(C) ஐந்து வருடம்
(D) பத்து வருடம்

41. Compensation leave in lieu of attendance on a holiday may be availed

(A) Automatically
(B) After one year
(C) With prior permission
(D) Without prior permission

ஒரு விடுமுறை நாளில் அலுவலக வருகைக்கு பதிலாக ஈடுசெய் விடுப்பு துய்க்க

(A) தன்னிச்சையாக துய்க்கலாம்
(B) ஒரு வருடம் கழித்து துய்க்கலாம்
(C) முன் அனுமதியுடன் துய்க்கலாம்
(D) முன் அனுமதியின்றி துய்க்கலாம்

42. A Hindu Junior Assistant may attend office one hour late on the day of

(A) Full moon day
(B) New moon day
(C) Lunar Eclipse
(D) Solar Eclipse

ஒரு இந்து மதத்தைச் சேர்ந்த இளநிலை உதவியாளர் எந்த நாளில் ஒரு மணிநேரம் தாமதமாக அலுவலகத்திற்கு வரலாம்?

(A) பௌர்ணமி
(B) அமாவாசை
(C) சந்திர கிரகணம்
(D) சூரிய கிரகணம்

43. A current file means

(A) electricity file
(B) a file in action
(C) flow of water
(D) file of sensitive matters

நடப்பு கோப்பு என்றால் என்ன பொருள்?

(A) மின்சார கோப்பு
(B) நடவடிக்கையிலுள்ள கோப்பு
(C) நீரின் ஓட்டம்
(D) முக்கிய பொருள் குறித்த கோப்பு

44. Flags in files shall be marked with

(A) Alphabets (B) Numbers

(C) Bullets (D) Stars

கோப்புகளில் வைக்கப்படும் கொடிகளில் ———————— குறிக்கப்படும்.

(A) எழுத்துக்கள் (B) எண்கள்

(C) புள்ளிகள் (D) நட்சத்திரங்கள்

45. The page numbering in Note files shall be in

(A) Black ink (B) Yellow ink

(C) Green ink (D) Red ink

குறிப்புக் கோப்புகளில் பக்க எண் எந்த நிறமையினால் இடப்படும்?

(A) கருப்பு நிற மை (B) மஞ்சள் நிற மை

(C) பச்சை நிற மை (D) சிகப்பு நிற மை

46. When a file is submitted to a court of justice, the Note file shall

(A) also be submitted (B) not be submitted

(C) be destroyed (D) be enclosed

ஒரு கோப்பு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் போது, குறிப்பு கோப்பு

(A) சேர்த்து அனுப்பப்பட வேண்டும் (B) சேர்த்து அனுப்ப தேவையில்லை

(C) அழிக்கப்பட வேண்டும் (D) இணைக்கப்பட வேண்டும்

47. For 'N. Disposal' when there is no such entry in Fair Copy Register the Despatch Stamp shall be affixed in the

(A) Despatch Register (B) Personal Register

(C) Running Note file (D) Stamp Register

உடன் முடிவின் போது 'அதற்கான பதிவு சுத்தநகல் பதிவேட்டில் இல்லையென்றால், அனுப்புகைக்கான முத்திரையை எந்த பதிவேட்டில் பதிக்கவேண்டும்?

(A) அனுப்புகை பதிவேடு (B) தன் பதிவேடு

(C) தொடர்குறிப்புப் பதிவேடு (D) அஞ்சல்வில்லை பதிவேடு

48. Tappals delivered with insufficient stamps may be

(A) Accepted (B) Rejected

(C) Returned (D) Stopped

போதுமான அஞ்சல்வில்லைகள் ஒட்டப்படாமல் வரப்பட்ட தபால்கள்

(A) பெறப்படலாம் (B) மறுக்கப்படலாம்

(C) திருப்பப்படலாம் (D) நிறுத்தப்படலாம்

49. All petitions from public shall be affixed with

(A) Court fee Stamps

(B) Postal Stamps

(C) Revenue Stamps

(D) Service Stamps

பொதுமக்களிடமிருந்து வரும் எல்லா மனுக்களும் எந்த வில்லை ஒட்டப்பட்டிருக்க வேண்டும்

(A) நீதிமன்ற கட்டண வில்லை

(B) அஞ்சல் வில்லை

(C) வருவாய் வில்லை

(D) அரசுப்பணி வில்லை

50. When a family member of a Junior Assistant suffers from Cholera or chicken pox intimation to office shall be made by

(A) a Leave Letter
(B) writing
(C) orally
(D) special report

ஒரு இளநிலை உதவியாளரின் குடும்ப உறுப்பினர் காலரா அல்லது பெரியம்மை நோயினால் பாதிக்கப்பட்டால் அலுவலகத்திற்கு தகவல் எந்த முறையில் அனுப்பவேண்டும்?

(A) ஒரு விடுப்புக் கடிதம் மூலம்
(B) எழுத்துப்பூர்வமாக
(C) வாய்மொழியாக
(D) சிறப்பு அறிக்கை மூலம்

51. An officer taking charge of an office- library shall report any missing books within a period of

(A) One month
(B) Three months
(C) Six months
(D) One year

ஒரு அலுவலக நூலகத்தினை பொறுப்பேற்கும்போது, காணாமல் போன புத்தகங்கள் குறித்து எவ்வளவு காலத்திற்குள் அறிக்கை செய்ய வேண்டும்

(A) ஒரு மாதம்
(B) மூன்று மாதம்
(C) ஆறு மாதம்
(D) ஒரு வருடம்

52. The Minimum educational qualification prerequisite for Class IV category in Tamil Nadu Basic Service Rule is

(A) Able to read and write
(B) 5th Standard Pass
(C) 8th Standard or 3rd form Pass
(D) 10th Pass

தமிழ்நாடு அடிப்படை பணிகள் விதிகளின்படி வகுப்பு IV பணி வகைக்கான குறைந்தபட்ச கல்வித் தகுதி

(A) எழுத, படிக்க தெரிந்திருத்தல்
(B) ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி
(C) எட்டாம் வகுப்பு அல்லது மூன்றாம் பாரம் தேர்ச்சி
(D) பத்தாம் வகுப்பு தேர்ச்சி

53. An unmarried son of a deceased Government servant applies for appointment on compassionate grounds. He does not belong to SC or ST or BC What is the maximum age limit eligible in this case.

(A) 30 years (B) 32 years

(C) 35 years (D) No age limit

இறந்த அரசு ஊழியரின் மணமாகாத ஒரு மகன் கருணை அடிப்படையில் வேலை கேட்டு விண்ணப்பிக்கிறார். அவர் எஸ்சி, எஸ்டி அல்லது பிசி எந்த வகுப்பையும் சேர்ந்தவரில்லை. அவருக்கான அதிகபட்ச வயது வரம்பு என்ன

(A) 30 வயது (B) 32 வயது

(C) 35 வயது (D) வயது வரம்பில்லை

54. Advance crediting of Earned leave shall be done

(A) once in a month (B) once in three months

(C) twice in a year (D) twice in three years

ஈட்டிய விடுப்பை முன்கணக்கிடுதல் செய்யப்படுவது

(A) மாதம் ஒருமுறை (B) மூன்று மாதங்களுக்கு ஒருமுறை

(C) ஆண்டுக்கு இருமுறை (D) மூன்று ஆண்டுக்கு இருமுறை

55. The punishment of stoppage of increment without cumulative effect does not postpone the future increments.

(A) correct (B) wrong

(C) partly correct (D) partly wrong

திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு தள்ளி வைக்கப்படும் தண்டனை எதிர்கால ஊதிய உயர்வுகளை பாதிக்காது. இது

(A) சரி (B) தவறு

(C) ஓரளவு சரி (D) ஓரளவு தவறு

56. Correction slips shall be pasted in the relevant places in relevant books within ———— of receipt of such amendments.

(A) Three days
(B) One week
(C) One month
(D) Three months

திருத்தச் சீட்டுக்கள் உரிய புத்தகத்தில் உரிய இடத்தில் அத்தகைய திருத்தங்கள் கிடைக்கப்பெற்ற ———— ஒட்டப்பட வேண்டும்.

(A) மூன்று நாட்களில்
(B) ஒரு வாரத்தில்
(C) ஒரு மாதத்தில்
(D) மூன்று மாதத்தில்

57. The authority; issued suspension orders, can ———— the subsistence allowance after six months and shall record the reason therefore in writing

(A) Cancel
(B) Increase or decrease
(C) Stop
(D) Terminate

தற்காலிக. பணிநீக்க ஆணை வாங்கிய அலுவலர் ஆறு மாதங்களுக்குப் பிறகு பிழைப்பூதியத்தினை ———— செய்து அதற்கான காரணத்தை எழுத்துபூர்வமாக பதிவுசெய்ய வேண்டும்.

(A) ரத்து
(B) கூட்டவோ குறைக்கவோ
(C) நிறுத்தம்
(D) முடிவு

58. When a Government servant under suspension fails to furnish a certificate that he is not engaged in any other employment, business or profession,

(A) the subsistence allowance shall be paid
(B) the subsistence allowance shall not be paid
(C) half of the subsistence allowance shall be paid
(D) double of the subsistence always shall be paid

தற்காலிக பணிநீக்கத்திலுள்ள ஒரு அரசு ஊழியர் தாம் வேறு எந்த வேலை, வியாபாரம் அல்லது தொழிலில் ஈடுபடவில்லை என்பதற்கான சான்றிதழை வழங்கத் தவறினால், அவருக்கு

(A) பிழைப்பூதியம் வழங்கப்படலாம்
(B) பிழைப்பூதியம் வழங்கப்படக்கூடாது
(C) பாதியளவு பிழைப்பூதியம் வழங்கப்படலாம்
(D) இருமடங்கு பிழைப்பூதியம் வழங்கப்படலாம்

59. For leave on medical grounds. the medical certificate shall be issued by

(A) Any Authorised medical attendant (B) Asst. Civil Surgeon only

(C) Civil surgeon only (D) Government physicians only

மருத்துவ காரணங்களுக்கான விடுப்புகளுக்கு யார் சான்று வழங்கினால் போதுமானது

(A) அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் (B) உதவி சிவில் சர்ஜன் மட்டுமே

(C) சிவில் சர்ஜன் மட்டுமே (D) அரசு மருத்துவர்கள் மட்டும்

60. In case where a Government servant has been retired on medical invalidation, encashment of earned leave and leave on private affair is

(A) eligible (B) not eligible

(C) partly eligible (D) partly not eligible

மருத்துவ தகுதியின்மை காரணமாக பணி ஓய்வு பெறும் ஒரு அரசு ஊழியர் தமது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பு மற்றும் சொந்த அலுவல் பேரிலான ஈட்டா விடுப்பு ஆகியவற்றை பணமாக்க

(A) தகுதியுள்ளது (B) தகுதியில்லை

(C) ஓரளவுக்கு தகுதியுள்ளது (D) ஓரளவுக்கு தகுதியில்லை

61. The preparation time allowed for transfer from one station to another station is

(A) Two days (B) Four days

(C) Six days (D) Eight days

ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடமாறுதலில் செல்ல அனுமதிக்கப்படும் தயாராவதற்கான பணி ஏற்பிடைக்காலம்

(A) இரண்டு நாட்கள் (B) நான்கு நாட்கள்

(C) ஆறு நாட்கள் (D) எட்டு நாட்கள்

62. The unavailed joining time may be credited to the

(A) Casual leave account

(B) Earned leave account

(C) Unearned leave account

(D) Private affairs leave account

துய்க்கப்படாத பணி ஏற்பிடைக்காலம் ———————— வரவு வைக்கப்படலாம்.

(A) தற்செயல் விடுப்புகணக்கில்

(B) ஈட்டிய விடுப்பு கணக்கில்

(C) ஈட்டா விடுப்பு கணக்கில்

(D) சொந்த அலுவல் பேரிலான விடுப்பு கணக்கில்

63. For the purpose of the "Foreign Service Rules", ———————— should be treated as outside India.

(A) Assam (B) Bihar

(C) Nepal (D) Uttarakand

"அயற்பணி விதிகள்" நோக்கத்திற்காக ———————— இந்தியாவுக்கு வெளியே உள்ள நாடாக கருதப்பட வேண்டும்.

(A) அசாம் (B) பீகார்

(C) நேபாளம் (D) உத்தரகாண்ட்

64. The cost of service book of an employee shall be borne by the

(A) Department (B) Government

(C) Employee (D) Office

ஒரு ஊழியரின் பணிப் பதிவேட்டின் விலை யாரால் ஏற்றுக்கொள்ளப்படும்?

(A) உரிய துறை (B) அரசு

(C) ஊழியர் (D) அலுவலகம்

65. When the year and month of birth are known, but not the exact date, the date to be taken as date of birth is

(A) 1st of the month

(B) 15th of the month

(C) 16th of the month

(D) 30th of the month

பிறந்த வருடமும், மாதமும் தெரிந்திருந்து, சரியான தேதி தெரியாத நிலையில், பிறந்த தேதியாக எடுக்கும் நாள்

(A) மாதத்தின் முதல் தேதி

(B) மாதத்தின் பதினைந்தாம் தேதி

(C) மாதத்தின் பதினாறாம் தேதி

(D) மாதத்தின் முப்பதாம் தேதி

66. A Forester who has rendered a services of 21 years is eligible for unearned leave on medical certificate upto

(A) 6 months

(B) 9 months

(C) 12 months

(D) 18 months

21 ஆண்டுகள் பணி முடித்த ஒரு வனவர் ——————— வரை மருந்துவ சான்றின் பேரில் ஈட்டா விடுப்புக்கு தகுதியுடையவர்.

(A) 6 மாதங்கள்

(B) 9 மாதங்கள்

(C) 12 மாதங்கள்

(D) 18 மாதங்கள்

67. In cases of withholding of increment with cumulative effect could not be given effect, the monetary value equivalent to ——————— times the amount of increment ordered to be withheld

(A) Two

(B) Three

(C) Four

(D) Five

திரண்ட பயனுடன் கூடிய ஊதிய நிறுத்த தண்டனையை செயல்படுத்த முடியாத நிலையில், நிறுத்தவேண்டிய ஊதிய உயர்வின் பணமதிப்பில் ——————— மடங்கு தொகையை பிடித்தம் செய்யவேண்டும்.

(A) இரண்டு

(B) மூன்று

(C) நான்கு

(D) ஐந்து

68. The removal of a person from civil service of a state Government shall ———— him for future employment

(A) disqualify
(B) not disqualify
(C) not include
(D) prevent

ஒரு மாநில அரசு குடிமைப் பணியிலிருந்து ஒருவர் விலக்கப்பட்டால் அது அவரது எதிர்கால வேலைவாய்ப்புக்கு

(A) தகுதியற்ற தாக்கும்
(B) தகுதியற்றதாக்காது
(C) சேர்க்காமல் இருக்கச் செய்யும்
(D) தடை செய்யும்

69. When the disciplinary authority has not mentioned anything about appeal in the final orders on a charge sheet, the delinquent officer

(A) has right to prefer an appeal
(B) has no right to prefer an appeal
(C) has to request permission for appeal
(D) has no right to request for permission

ஒழுங்கு நடவடிக்கை அலுவலர் ஒரு குற்றத்தாள் மீதான இறுதி ஆணையில் மேல்முறையீடு பற்றி ஏதும் குறிப்பிடாத நிலையில், குற்றம் சுமத்தப்பட்டுள்ள அலுவலர்

(A) மேல்முறையீடு செய்ய உரிமையுள்ளவர்
(B) மேல்முறையீடு செய்ய உரிமையற்றவர்
(C) மேல்முறையீடு செய்ய அனுமதிகோர வேண்டும்
(D) மேல்முறையீடு செய்ய அனுமதிகோர உரிமையில்லை

70. A forester appealed with a copy of his previous explanation, without any new facts or points on a final orders. The appeal

(A) may be withheld
(B) is correct
(C) is in order
(D) is perfect

ஒரு வனவர் ஒரு இறுதி ஆணை மீது, எந்த ஒரு புதிய செய்தியோ, விளக்கமோ சேர்க்காமல் தமது முந்தைய விளக்கத்தினையே அனுப்பி மேல்முறையீடு செய்தார். இம் மேல்முறையீடு

(A) நிறுத்திவைக்கத்தக்கது
(B) சரியானது
(C) ஒழுங்கானது
(D) முறையானது

71. A person who has two wives living, is a topper on merits. Whether he is eligible for appointment as an office watchman?

(A) Eligible

(B) Not eligible

(C) Discretion of the appointing authority

(D) Discretion of the Head of the Department

உயிருடன் உள்ள இரண்டு மனைவிகளைக் கொண்டு மற்றபடி சிறந்த தகுதிகள் கொண்ட ஒருவர் அலுவலக காவலாளியாக நியமனம் செய்ய தகுதியுள்ளவரா?

(A) தகுதியுள்ளவர்

(B) தகுதியில்லாதவர்

(C) நியமன அலுவலரின் முடிவு

(D) துறைத்தலைவரின் முடிவு

72. A candidate who has written the final year degree examinations applies for preliminary examinations of Group I TNPSC. Whether he shall be allowed or not?

(A) Shall be allowed (B) Shall not be allowed

(C) Discretion of the TNPSC (D) Discretion of the Government

ஒரு பட்டப்படிப்பின் இறுதியாண்டு தேர்வுகள் எழுதியுள்ள நபர் ஒருவர் TNPSC குரூப் I பூர்வாங்க தேர்வுக்கு விண்ணப்பித்துள்ளார். அவரை அனுமதிக்கலாமா?

(A) அனுமதிக்கலாம் (B) அனுமதிக்க முடியாது

(C) TNPSC ன் முடிவு (D) அரசின் முடிவு

73. No person shall be eligible for appointment to any service by direct recruitment unless he has completed ———————— year of age on the first July of the year in which the vacancy is notified

(A) Twelve (B) Fourteen

(C) Sixteen (D) Eighteen

எந்தவொரு நபர் நியமனம் அறிவிக்கப்படும் ஆண்டின் ஜூலை முதல் தேதியில் அவர் ———————— ஆண்டு வயது நிறைவு பெற்றிருந்தாலன்றி நேரடியான ஆட்சேர்ப்பின் மூலம் நியமனம் செய்யப்பட தகுதியற்றவர்.

(A) பன்னிரன்டு (B) பதினான்கு

(C) பதினாறு (D) பதினெட்டு

74. The chairperson of the committee on appeals under Act 67 (1) of the Tamilnadu Government (Condition of service) Act, 2016 is

(A) The Chief secretary to the Government

(B) The Vigilance Commissioner and Commissioner for Administrative Reforms

(C) The Secretary to Government law Department

(D) Secretary to Government Finance Department

2016 ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு (சேவை நிபந்தனை) சட்டத்தின் 67(1) சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டுக் குழுவின் தலைவர்

(A) தலைமை செயலாளர்

(B) விஜிலன்ஸ் கமிஷனர் மற்றும் நிர்வாக சீர்திருத்த ஆணையர்

(C) சட்டத்துறை செயலாளர்

(D) நிதித்துறை செயலாளர்

75. A Forest Range Officer's increment was withheld without cumulative effect for two years, This is a

(A) Major Punishment
(B) Minor Punishment
(C) Not a Punishment
(D) Warning

ஒரு வனச்சரக அலுவலரின் ஊதிய உயர்வு இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஒத்திவைக்கப்பட்டது. இது ஒரு

(A) பெரும் தண்டனை
(B) சிறு தண்டனை
(C) தண்டனை இல்லை
(D) எச்சரிக்கை

76. Compulsory retirement is a

(A) Major Punishment
(B) Minor Punishment
(C) Not a Punishment
(D) Warning

கட்டாய ஓய்வு என்பது ஒரு

(A) பெரும் தண்டனை
(B) சிறு தண்டனை
(C) தண்டனை இல்லை
(D) எச்சரிக்கை

77. Which is not treated as emoluments?

(A) Pay
(B) Personal Pay
(C) Special Pay
(D) Travelling Allowance

இதில் எந்தவொன்று சம்பளமாக கருதப்படுவதில்லை?

(A) ஊதியம்
(B) தனி ஊதியம்
(C) சிறப்பு ஊதியம்
(D) பயணப் படி

78. A Forester completes his first year service on the 29-9-2016. What is the date of his first increment?

(A) 01-07-2016
(B) 29-09-2016
(C) 01-10-2016
(D) 01-07-2017

ஒரு வனவர் தமது முதலாண்டு பணியை 29-9-2016 ல் நிறைவு செய்துள்ளார். அவரது முதல் ஊதிய உயர்வு தேதி என்ன

(A) 01-07-2016
(B) 29-09-2016
(C) 01-10-2016
(D) 01-07-2017

79. The appointing authority for appointment of Forester post by transfer from the Tamilnadu Ministerial Service as per Tamilnadu Forest Subordinate Service Rules is

(A) District Forest Officer
(B) Conservator of Forests
(C) Head of the Department
(D) The Government

தமிழ்நாடு அமைச்சுப்பணியிலிருந்து மாற்றம் மூலம் வனவரை பணி நியமனம் செய்ய அதிகார முடையவர் யார்?

(A) மாவட்ட வன அலுவலர்
(B) வனப்பாதுகாவலர்
(C) துறைத் தலைவர்
(D) அரசு

80. The post of Draughting Officer in the Forest Department comes under

(A) Tamilnadu Basic service
(B) Tamilnadu General subordinate Service
(C) Tamilnadu Forest Subordinate service
(D) Tamilnadu Ministerial service

வனதுறை தொழில் அலுவலர் பதவி எந்த பணியை சேர்ந்தது?

(A) தமிழ்நாடு அடிப்படை பணி
(B) தமிழ்நாடு பொது சார்நிலைப் பணி
(C) தமிழ்நாடு வன சார்நிலை பணி
(D) தமிழ்நாடு அமைச்சுப் பணி

027/DD/20

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

DEPARTMENTAL EXAMINATIONS

# FOREST DEPARTMENT TEST – FUNDAMENTAL RULES OF TAMIL NADU GOVERNMENT, TAMIL NADU STATE SERVICE RULES ETC.

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

## DESCRIPTIVE TYPE

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**
வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

NB : **Words of masculine gender in these instructions shall, where the context so require, be taken to include feminine gender.**
இந்த அறிவுறுத்தலில் ஆண் பாலினரின் வார்த்தைகளில், சூழலுக்கேற்ப தேவைப்படின் பெண் பாலினரின் வார்த்தைகளும் அடங்கும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.
விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).
விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.
வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

[Turn over

**Answer in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.**

**Answer any FOUR questions.**

எவையேனும் நான்கு கேள்விகளுக்கு விடையளிக்கவும். **(4 × 5 = 20)**

1. Write a short note on actions to be taken in case of Fire accidents.

   தீ விபத்து ஏற்பட்டால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

2. Write about the five kinds of file disposals : N.Dis., L.Dis., K.Dis., D.Dis., R.Dis.

   ஐந்து வகை கோப்பு முடிவுகள் பற்றி எழுதுக : உ.மு, ஓ.மு, மூ.மு, ப.மு, நி.மு.

3. A Forester's increment date is 1-7-2016. His next increment was postponed for two years without cumulative effect excluding the period spent on leave, in a District Forest Officer's order dated 10-6-2016. He had availed the following spells of leave : (a) 3-8-2016 to 27-8-2016 = 25 days Unearned Leave on Medical Certificate, (b) 2-1-2017 to 11-1-2017 = 10 days Earned Leave. Calculate the date of next increment after completion of punishment with the date of financial effect.

   ஒரு வனவரின் ஊதிய உயர்வு தேதி 1.7.2016 ஆகும். 10.6.2016 தேதியிட்ட ஒரு மாவட்ட வன அலுவலரின் உத்தரவில், வனவரது அடுத்த ஊதிய உயர்வு இரண்டு ஆண்டுகளுக்கு விடுப்பு காலம் நீங்கலாக தள்ளி வைத்து ஆணை வழங்கப்பட்டது. அவரால் துக்கப்பட்ட விடுப்பு விபரம் : (அ) 3.8.2016 முதல் 27.8.2016 = 25 நாட்கள் மருத்துவ சான்றிதழில் ஈட்டா விடுப்பு, (ஆ) 2-1-2017 முதல் 11.1.2017 = 10 நாட்கள் ஈட்டிய விடுப்பு. தண்டனை முடிவுற்றபின் வனவரது அடுத்த ஊதிய உயர்வு தேதியை நிதிப்பயன் தேதி விபரத்துடன் கணக்கிடுக.

4. Write important points regarding Inquiry under Rule 17(b) of the Tamilnadu Civil Services (Discipline and Appeal) Rules.

   தமிழ்நாடு குடிமைப்பணிகள் (ஒழுங்குமுறையும் மேல்முறையீடும்) விதிகளின் விதி 17 (ஆ) கீழ் விசாரணையைப் பற்றிய முக்கிய குறிப்புகளை எழுதுக.

5. Write short note on "Subsistence allowance".

   பிழைப்பூதியம் பற்றி சிறு குறிப்பெழுதுக.

6. Write about the three kinds of retirement.

   மூன்று வித பணிஓய்வு வகைகள் பற்றி சிறு குறிப்பு வரைக.

---